**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 117/2018**

Deposition of the witness for Prosecution **PW** 3

Name : தங்கம்

Father's/Husband's Name :

Age :

Village and Taluk :

Caste and Religion :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (30.06.2025)

A1to A3 absent

முதல் விசாரணை

1. நான் தவணையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மாரியப்பன் எனது மருமகன். எதிரிகளை தெரியும். ஏழு வருடத்திற்கு முன்பு நான் வயல்காட்டில் களை வெட்டிக் கொண்டிருந்தேன். வடக்கு பக்கம் திரும்பி பார்த்தபோது அடிபம்பு பக்கம் வைத்து எதிரிகள் மூன்று பேரும் குழு பண வரவு சம்பந்தமாக எனது மருமகனிடம் சண்டை போட்டார்கள். நான்தான் குழுவை நடத்துகிறேன். என்னிடம் பணம் கேட்காமல், எனது மருமகனிடம் பணம் கேட்டதால், நான் பணத்தை என்னிடம் கேட்கச் சொன்னேன். சுடலைமுத்து அருவாளால் எனது மருமகனின் தலையில் அடித்தார் மற்ற எதிரிகள் இருவரும் பிடித்துக் கொண்டு சண்டை போட்டார்கள். நான் ஓடி வந்து சண்டையை விலக்கிவிட்டேன். நான் காயம்பட்ட என் மருமகனை செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(எதிரி தரப்பில் வழக்கறிஞரும் ஆஜராகவில்லை, எதிரியும் ஆஜராகவில்லை அதனால் எதிரிக்கு பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.)

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.06.30 12:31:11 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 117/2018**

Deposition of the witness for Prosecution **PW** 2

| | | |
|---|---|---|
| Name | : | சாமி |
| Father's/Husband's Name | : | |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (30.06.2025)

Accused absent

<u>முதல் விசாரணை</u>

1. வேம்பநல்லூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 தெரியும். எதிரிகளையும் தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ப.சா.3 மாடசாமி தற்போது இறந்துவிட்டார்.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2. கடந்த 18.12.2017 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு தவணை ஆந்தைபுளி அடிபம்பு பக்கம் வைத்து 2 வது எதிரி அ.சா.1-யை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. 1 வது எதிரி மாரியப்பனின் தலையில் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகள் அ.சா.1-யை கீழே தள்ளிவிட்டு கொலை மிரட்டல் விடுவித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில்

கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.06.30 12:31:18 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 117/2018**

Deposition of the witness for Prosecution **PW** 1

| | | |
|---|---|---|
| Name | : | மாரியப்பன் |
| Father's/Husband's Name | : | |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (30.06.2025)

Accused absent

<u>முதல் விசாரணை</u>

1. நான் தவணையில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சுடலைமுத்துவிற்கு நான் ரூபாய் கொடுக்க வேண்டியிருந்தது. கடந்த ஏழு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 7 மணிக்கு ஆந்தைக்குடி அடி பம்பு பக்கம் வைத்து எதிரி சுடலைமுத்து என்னிடம் 300/- ரூபாய் கேட்டார் நான் பணம் இல்லை என்று சொன்னேன். அதனால் எதிரி சுடலைமுத்து என்னை தேவடியா மகனே என்று அசிங்கமாக பேசினார். பின்னர் என்னை அருவாளால் நெற்றி பக்கம் கொத்திவிட்டார். அதன் பின்னர் முருகையா, முத்துக்குமார் ஆகியோர்கள் கம்பால் எனது முதுகில் அடித்தார்கள். அதன் பின்பு அவர்கள் போய்விட்டார்கள். நான் ஒரு போக்கு ஆட்டோவில் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். செங்கோட்டை மருத்துவமனையில் வைத்து நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை

விசாரித்தார்கள்

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(எதிரி தரப்பில் வழக்கறிஞரும் ஆஜராகவில்லை, எதிரியும் ஆஜராகவில்லை அதனால் எதிரிக்கு பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.)

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.06.30 12:31:24 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai